## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, ஜூலை மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூலை மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை: ரூபா 1.20* *தபாற் செலவு: சதம் 60*

**1984 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1984 ஜூலை மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**க. வ. ஓ. 19/83**
**1573**

**மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிதியம் ஒன்று, இதற்கிணை அட்டவணையில் தரப்பட்டுள்ளதும், அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திவாகர புஞ்சிபண்டா மகாதிவுல்வெவ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான (இதனகத்துப்பின்னர் "உறுதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நான்காம் நாள் எனத் தேதியிடப்பட்ட 2217 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதி மூலம், தேசிய இனத் தோற்றுவாயைக் கணிப்பிலெடுக்காது மானிடமேம்பாட்டுக்கும், அபிவிருத்திக்கும், சமாதானத்துக்கும் கணிசமானளவு பங்களிப்பொன்றைச் செய்துள்ளவர்களான ஆட்களை அல்லது அவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளவைகளான தொகுதிகளை அல்லது ஒழுங்கமைப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துக்காக இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன்பின்னரும் மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது, இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் "மானிடமேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைத்தல்.

எ 074289—2,650 (12/83)

(2) நிதியமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப் பட்ட பெயர்கொண்டும், இதனகத்துக் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக் காகவும் இடையறு வழியுரிமை கொண்டதாதல் வேண்டும் என்பதுடன், அது, அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடர லாம்; அத்துடன் அதற்கு எதிராக வழக்குத் தொடரவும்படலாம். அத் துடன், பொது இலச்சினையொன்றை, அதன் நற்றுணிபின்படி அதனை மாற்றுவதற்குள்ள தத்துவத்துடன், வைத்திருத்தல் வேண்டும்.

**நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

3. (1) நிதியத்தின் நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும் இதனகத் துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும் நிதி யத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, ஆயுட்காலத்திற்கு நியமிக்கப் படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

1. கலாநிதி அஹங்கமகே ரியூடர் ஆரியரத்ன
2. திரு. மல்லிய வடு கருணரத்ந
3. திரு. பேரகம ஆராச்சிகே தர்மா குணசிங்க
4. திருமதி சிதா வேர்ஜினியா இராஜசூரிய
5. திரு. வில்லியம் சத்தகே
6. பேராசிரியர் நந்தசேன இரட்ணபால
7. கலாநிதி பலாணகே அமரசிங்க
8. திரு. சதீஸ் த மெல்
9. திரு. மல்வத்தகே எட்மன்ட் வால்டர் பீரிஸ்

(3) தாபகரே சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் என்பதுடன், சபையின் எல்லாக் கூட்டங்களின்போதும் தலைமைதாங்குதலும் வேண் டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்தில் சமூகமாயிராதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்கான தவி சாளரை தம் மத்தியிலிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) சபையானது தம்மிடையேயிருந்து சபைக்கான செயலாளர் ஒரு வரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களை விடுத்தலும், நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகம் ஒன்றைப் பேணிவருதலும் செயலாளரின் கடமையாதல் வேண்டும். இந் நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத் தில் செயலாளர், சபையினது கூட்டங்களின்போதான எல்லா நடவ டிக்கைகளையும் பதிதல் வேண்டும் என்பதுடன், காலத்துக்குக் காலம் சபையினால் அவருக்குக் கையளிக்கப்படுகின்றவாறான பணிகளை நிறை வேற்றுதலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(5) ஆளொருவர்—

(அ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது வங்கி முறிந்தவரொருவராக வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராகவிருந்தால் அல்லது வங்கி முறிந்தவராகவிருந்தால் ;

(ஆ) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவராகவிருந்தால் ;

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவரென அல்லது மனக்குறைபாடுடையவரெனக் காணப்பட்டவராகவிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டவராகவிருந்தால் ; அல்லது

(ஈ) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவராகச் செயலாற்றுது அசட்டையாகவிருந்தால்,

அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(6) தாபகர் இறக்குமிடத்து, அவரது குடும்பத்தில் மிகநெருங்கிய உறவினர் அல்லது கிட்டிய உறவினர் வழியுரிமையாளராக வருதல் வேண்டும்.

(7) தாபகர் தவிர்ந்த சபையின் வேறு உறுப்பினர் எவரேனும், ஆறு மாதங்களை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் இலங்கைக்குத் திரும்பும்வரையில், அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு வேறோர் ஆளைத் தாபகர் எழுத்தில் நியமிக்கலாம்.

(8) தாபகர் தவிர்ந்த சபையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, அல்லது பதவி விலகுமிடத்து அல்லது (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சபையின் உறுப்பினரொருவராக இல்லாதொழியுமிடத்து, இறக்கும் அல்லது பதவி விலகும் அல்லது உறுப்பினர் ஒருவராக இல்லாதொழியும் உறுப்பினரின் இடத்துக்கு வேறோர் ஆளைத் தாபகர் எழுத்தில் நியமித்தல் வேண்டும்.

(9) சபை உறுப்பினர்கள், சபையின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் மீதும் ஏகமனதான முடிபுகளைச் செய்ய முயற்சித்தல் வேண்டும். சபை உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு எதுவும் காணப்படும் சந்தருப்பத்தில், பெரும்பான்மையோரின் முடிபே பிணிப்பதாதலும் பயனுறுவதாதலும் வேண்டும்.

(10) சபையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறையேனும் கூடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாகவிருத்தலும் வேண்டும்.

(11) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

(12) சபையின் உறுப்பினர்கள், சம்பளம், படி அல்லது மதிப்பூதியம் என்றவகையாக ஊதியம் எதனையும் பெறுதற்குரித்துடையாராதல் ஆகாது. ஆனால், அவர்களது கடமைகளைப் புரிகையில் அவர்களால் உறப்படும் உண்மையான கைச்செலவுகள் அவர்களுக்கு மீளளிக்கப்படலாம்.

நிதியத்தின் இலச்சினை.

4. நிதியத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம். இலச்சினையானது, சபையின் அனுமதியுடனும், சபையின் ஈருறுப்பினர்களது முன்னிலையிலும் அன்றி எச்சாதனத்திலும் இடப்படலாகாது; அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

நிதியத்தின் குறிக்கோள்கள்.

5. நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும். அவையாவன :—

(அ) தேசிய இனத்தோற்றுவாயைக் கணிப்பிலெடுக்காது மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்குப் பாடுபட்டுள்ளவர்களான ஆட்களுக்கு, அல்லது பாடுபட்டுள்ளவையான தொகுதிகளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்களுக்கு வெகுமதியளித்தல் ;

(ஆ) இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதான சங்கம் அதன் குறிக்கோள்களை எய்துவதில் அதற்கு ஆதரவளித்தல் ;

(இ) இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதான சங்கத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்குக் கணிசமான சேவையாற்றியுள்ளவர்களான ஆட்களுக்கு வெகுமதியளித்தல் ; அத்துடன்

(ஈ) மேற்கூறிய குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்தனவாகக் கூடியவாறான வேறெல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தல்.

தெரிவுக் குழு.

6. (1) சபையானது, ஐந்து ஆட்களைக் கொண்டமைந்த (இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெரிவுக் குழுவொன்றை ஒவ்வோராண்டும் நியமித்தல் வேண்டும். இவர்கள், மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கு பங்களித்தமை காரணமாக, குழுவின் அபிப்பிராயப்படி பரிசுகள் வழங்கப் பெறுவதற்கு உரித்துடையவர்களான வெற்றிவாகைக்குரியவர்களை பெயர் குறித்து நியமிப்பது தொடர்பில் சபைக்கு விதப்புரைகள் செய்தல் வேண்டும்.

(2) பெயர் நியமனங்கள், பரிசு எச்செயற்பாடுகளுக்கு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அச் செயற்பாடுகளையும், அத்துடன்

(அ) ஆட்களின் விடயத்தில் அவர்களது ஆளடையாளத்தையும், தகைமைகளையும், நிலைமைகளையும், அவர்களது முகவரிகளையும், அத்துடன்

(ஆ) தொகுதிகளின் அல்லது ஒழுங்கமைப்புக்களின் விடயத்தில், சொல்லப்பட்ட தொகுதிகளின் அல்லது ஒழுங்கமைப்புக்களின் விவரணத்தையும், முகவரிகளையும்,

தெளிவாகக் குறித்துரைப்பனவாக, ஒவ்வோராண்டும் யூலை மாதம் முப்பத்தோராம் நாளுக்குப் பிந்தாமல் சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) சபையானது, பெயர் நியமனங்களின் ஏல்தகைமைமீது கட்டளையாக்குவதற்கும், பரிசுகள் வழங்குவது பற்றி தீர்மானிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், சபையின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும். சபையானது, ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் ஐந்தாம் நாளுக்குப் பிந்தாமல் அதன் முடிபை அறிவித்தல் வேண்டும்.

(ஆ) பரிசுகள் வழக்கமாக ஒவ்வோராண்டும் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், சபையானது ஏதேனும் பரிசை வழங்காது விடுவதற்கு முடிவுசெய்யலாம் என்பதுடன், அத்தகைய சந்தருப்பத்தில் வழங்கப்படாத அத்தகைய பரிசுத்தொகையானது நிதியத்தின் இருப்புச் சொத்துக்களை மீளச் சென்றடைதலும் வேண்டும்.

7. (1) வழக்கமாகப் பரிசொன்று தனியோர் ஆளுக்கு, தொகுதிக்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு வழங்கப்படுதல் வேண்டும். விதிவிலக்கான விடயங்களில் சபையானது பல செயற்பாடுகளுள் ஒவ்வொன்றும் பரிசுபெறுதற்கு தகுதியுடையதாகவிருக்கின்றதெனக் கருதுகின்றவிடத்து ஒரு பரிசை இரண்டோ பலவோவாய சம பங்குகளாகப் பிரிக்கலாம். பரிசுகளை வழங்குதல்.

(2) வெற்றிவாகைக்குரியவர் ஒருவர் பரிசை ஏற்கமறுக்குமிடத்து ஏற்க மறுக்கப்பட்ட அப்பரிசுத்தொகை நிதியத்தின் சொத்துவமாகவிருத்தல் வேண்டும்.

(3) வெற்றிவாகைக்குரியவர் இறந்தபின்னர் பரிசு ஒன்று வழங்கப்படுதல் ஆகாது. எவ்வாறாயினும், அவர், பரிசு அறிவிக்கப்பட்ட தேதிக்கும், பரிசளிப்பு விழாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கும் இடையில் இறப்பாராயின், பரிசுத் தொகையானது வெற்றிபெற்றவரின் மரபுரிமையாளருக்கு அல்லது மரபுரிமையாளர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(4) வெற்றிவாகைக்குரியவர் அல்லது அவரது மரபுரிமையாளர்கள் பரிசை ஏற்றுக் கொள்வதற்கான அவரது அல்லது அவர்களது விருப்பத்தைத் தெரிவித்து இருப்பினும், திட்டமிட்ட நிர்ப்பந்தத்தின்மூலம் அவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியாது தடுக்கப்பட்டிருக்குமிடத்து, பரிசுத்தொகையானது அவர்களுக்கென ஐந்து ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் அது நிதியத்தின் இருப்புச் சொத்துக்களை மீளச் சென்றடைதல் வேண்டும்.

சபையின் தத்துவங்களும் பணிகளும்.

8. (1) சபையானது நிதியத்தின் பெயரில் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான, அல்லது உகந்தனவான, அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் உடையதாயிருத்தல் வேண்டும் :—

(அ) இச் சட்டத்தினால் அல்லது ஏதேனும் கொள்வனை, மானியக் கொடை, கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு என்பனவற்றின் பயனாக அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றலும், ஈடுவைத்தலும், குத்தகைக்கு கொடுத்தலும், வழங்குதலும், உரித்துமாற்றுதலும், மரணசாதனம் மூலம் கையுதிர்த்தலும், சாட்டுதல் செய்தலும், கொடுத்துமாற்றுதலும் அல்லது வேறு வகையில் கையாளுதலும் ;

(இ) நிதியத்துக்கு உரித்தாக்கப்படும் அல்லது நிதியத்தினால் கொள்ளப்படும் அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை கட்டியெழுப்புதல் ;

(ஈ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புகளில் நிதியத்துக்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்தல் ;

(உ) நிதியத்தின் நோக்கங்களுக்காக, வங்கிக்கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல், மூடுதல் அத்துடன் நிதியத்தின் ஆதனத்தைப் பிணைப்பொறுப்பாக வைத்து அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றி பணம் கடனெடுத்தல், அல்லது பணம் திரட்டுதல் ;

(ஊ) உண்ணாட்டு வளங்களிலிருந்தேனும், வெளிநாட்டு வளங்களிலிருந்தேனும் நிதிகள் திரட்டுதலும், மானியக்கொடைகளை, கொடைகளை, அல்லது நன்கொடைகளை காசாக அல்லது பொருளாக பெறுதலும் ; அத்துடன்

(எ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் இடைநேர்விளைவான, அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல் :

ஆயின், எவ்வாறாயினும், சபையானது ஏதேனும் கூட்டத்தின்போது சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையினரால் அத்தகைய கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானம் ஒன்றின்மூலம், நம்பிக்கைப்

பொறுப்பு நிதியத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அல்லது குத்தகைக்கெடுப்பதில் பயன்படுத்தல் வேண்டும் எனத் தீர்மானித்தாலேயொழிய, அத்தகைய பணம் எதனையும் அவ்வாறு கொள்வனவு செய்வதில் அல்லது குத்தகைக்கெடுப்பதில் பயன்படுத்துதலாகாது.

9. பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும் :— நிதியத்துக்குச் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

(அ) உண்ணாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து திரட்டப்பட்ட எவையேனும் நிதிகள் அல்லது பெறப்பட்ட எவையேனும் மானியக்கொடைகள், கொடைகள், அல்லது நன்கொடைகள் அல்லது தேறிப் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பணங்கள் ; அத்துடன்

(ஆ) நிதியத்தின் முதலீடுகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம் அல்லது நிதியத்துக்கு வருமதியாகவுள்ள வேறு வரவுகள்.

10. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :— நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.

(அ) வெற்றிவாகைக்குரியவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு அவசியமான பணங்கள் ;

(ஆ) நிதியத்தைத் தொழிற்படுத்தல், தாபித்தல், பேணுதல் என்பவற்றில் உறப்படும் செலவுகள் ;

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் உறப்படும் கைச் செலவுகள், அலுவலர்கள், சேவையாளர்கள், வேறு ஊழியர்கள் என்போருக்கான சம்பளங்கள் ; அத்துடன்

(ஈ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவையென சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

11. (1) சபையானது, நிதியத்தின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும், வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைப்பித்தல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) நிதியத்தின் கணக்குகள், சபையினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் அல்லது கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) வருமானச் செலவினக் கணக்கும், ஐந்தொகையும் சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின்மூலம் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களால் அவ்வாறு கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.

12. (1) சபையானது, அது உகந்ததெனக் கருதக்கூடியவாறு, பொதுக் கூட்டமொன்றின்போதும் அதில் சமூகமளித்து வாக்களிக்கும் சபை உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டும், இச்சட்டத்துடன் அல்லது எழுத்திலான வேறு சட்டத்துடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் காலத்திற்குக் காலம் ஆக்கலாம் :—

(அ) சபையின் நடத்தையும், கடமைகளும், அத்துடன் நிதியத்தின் அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் ;

(ஆ) பரிசுகள் வழங்குதலும் அத்துடன் அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களும் ;

(இ) நிதியத்தின் ஊழியர்களது நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) நிதியத்தின் ஆதனத்தினது நிருவாகமும் முகாமையும், வங்கிக் கணக்குகளை பேணிவருதலும், தொடங்குதலும், அத்தகைய கணக்குகளைத் தொழிற்படுத்தலும் ;

(உ) நிதிகளைத் திரட்டுதலும் அத்துடன் கொடைகளையும், மானியக் கொடைகளையும், நன்கொடைகளையும் சேகரித்தலும் ஏற்றுக் கொள்ளுதலும் ; அத்துடன்

(ஊ) நிதியத்தின் குறிக்கோள்களுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறேதேனும் கருமம்.

அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற கூட்டமொன்றிலும், அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) சபையின் உறுப்பினர்கள் நம்பிக்கைப் பொறுப்பின் விதிகளுக்கு அமைந்தோராகவிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணல்.

13. இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டோரும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருவோரும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

தாபகர்.

14. இச்சட்டத்தில் " தாபகர் " என்பது உறுதிக்கான பாயிரத்தில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பந்தியில் அத்தகையவரெனக் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் எனப் பொருளாகும் என்பதுடன், அவர் இறந்த பின்னர், தாபகரது குடும்பத்தின் மிக நெருங்கிய அல்லது கிட்டிய உறவினர் எனப் பொருளாதலும் வேண்டும்.

1984 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

அட்டவணை

இல. 2217

இத்தால் சகலரும் அறிவதாகுக

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள மொரட்டுவை, ராவதாவத்த வீதி 100 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கலாநிதி அஹங்கமகே ரியூடர் ஆரியரத்ன அவர்களை (இவர் இதனகத்துப்பின்னர் "தாபகர்" என அழைக்கப்பட்டு குறிப்பிடு செய்யப்படுவார்; அத்துடன், இப்பதம், சந்தருப்பம் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து அல்லது அனுமதிக்குமிடத்து சொல்லப்பட்ட கலாநிதி அஹங்கமகே ரியூடர் ஆரியரத்னவும், அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள், சாட்டுதல் பெற்றவர்கள் ஆகியோரும் எனப்பொருளாகும் என்பதுடன், அவர்களை உள்ளடக்குதலும் வேண்டும்) ஒரு திறந்தவராகவும், (1) கொழும்பு 5, கிருலப்பனை, எட்மன்டன் வீதி 5/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. மல்லிய வடுகருணைந்த (2) கொழும்பு 10, நாலந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு போகம ஆராச்சிகே தர்மா குணசிங்க (3) மகரகமை, கொடிகமுவ, நீலமஹார வீதி 31/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திருமதி சீதா வேர்ஜீனியா இராஜசூரிய (4) மொரட்டுவை ராவதாவத்த வீதி 98 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. வில்லியம் கந்தகே (5) மகரகமை, பமுனுவ, தேவாலய வீதி 21/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் நந்தசேன இரட்ணபால (6) நுகேகொடை, தொஹாவெலை பெபிலியான மாவத்தை 21/5 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கலாநிதி பலானகே அமரசிங்க (7) பாணந்துறை வலனை, காலி வீதி 20 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. சதிஸ் த மெல் (8) தலவத்துகொடை, ஹோகந்தரை வீதி 276 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. மல்வத்தகே எட்மன்ட் வால்டர் பீரிஸ் ஆகியோரை (இவர்கள் இதனகத்துப்பின்னர் "தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்" என அழைக்கப்பட்டு, குறிப்பீடு செய்யப்படுவர்) மறு திறந்தவராகவும் கொண்டு அவர்களுக்கிடையில் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்றும் ஆண்டு மார்ச்சு மாதம் நான்காம் நாளாகிய இன்று இந் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியானது அநுராதபுரத்தில் ஆக்கப்பட்டு செய்துகொள்ளப்படுகின்றது.

1982 ஆம் ஆண்டுக்கான "பவுதியின் அரசர் சமாதான அபிவிருத்திப் பரிசு" க்குரிய வெற்றிவாகைக்குரியவராகவும், தற்போது இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவராகவும் தாபகர் இருக்கின்றாராதலாலும்,

அத்துடன், தாபகர் தமது சொந்த அறிவு மூலமாகவும், அனுபவவாயிலாகவும், தேசிய இனத் தோற்றுவாயைக் கணிப்பிலெடுக்காது, மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கு கணிசமானளவு பங்களிப்பொன்றைச் செய்துள்ளவர்களான ஆட்களை அல்லது செய்துள்ளவையான தொகுதிகளை அல்லது ஒழுங்கமைப்புக்களை ஊக்குவிப்பதன் அவசியத்தை அறிந்து இருக்கின்றாராதலாலும்,

அத்துடன் மேற்கூறிய இலட்சியத்தை முன்னேற்றுவதற்காக தாபகர், மேற்சொல்லப்பட்ட பரிசுத் தொகையை நன்கொடையாக அளித்துள்ளதுடன், "மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கான சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என அழைக்கப்பட்டு அறியப்பட வேண்டியதான நிதியம் ஒன்றைத் தாபிப்பதற்கென தனிப்பட்ட நிதிகளைத் திரட்டியுள்ளாராதலாலும்,

அத்துடன், மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கு கணிசமானளவு பங்களிப்பு ஒன்றைச் செய்துள்ளவர்களான ஆட்களுக்கு அல்லது செய்துள்ளவையான தொகுதிகளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்களுக்கு, சொல்லப்பட்ட நிதியத்திலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து பரிசுகள் வழங்குவதற்கு தாபகர் விரும்புகின்றாராதலாலும், தற்போதைய நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் சொல்லப்பட்ட அறக்கொடையின் முகாமைக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகச் செயலாற்றுவதற்கு உடன்பட்டுள்ளார்களாதலாலும்,

ஆகவே, இந்நம்பிக்கைப் பொறுப்பு உறுதி பின்வருமாறு அமைகின்றது :—

1. நம்பிக்கைப் பொறுப்பு தாபிக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) தேசிய இனத் தோற்றுவாயைக் கணிப்பிலெடுக்காது, மானிட மேம்பாட்டையும், அபிவிருத்தியையும், சமாதானத்தையும் முன்னேற்றுவதற்கு பாடுபட்டுள்ளவர்களான ஆட்களுக்கு அல்லது பாடுபட்டுள்ளவையான தொகுதிகளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்களுக்கு வெகுமதியளித்தல் ;

(ஆ) இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதான சங்கம் அதன் குறிக்கோள்களை எய்துவதில் அதற்கு ஆதரவளித்தல் ;

(இ) சர்வோதய செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு கணிசமான சேவையாற்றியுள்ளவர்களான ஆட்களுக்கு வெகுமதியளித்தல் ; அத்துடன்

(ஈ) மேற்கூறிய குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உகந்தனவாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தல்.

2. தாபகர், இச்சாதனத்தின் தேதியன்றுள்ளவாறான வெளிநாட்டு நாணய விதப்படி பன்னிரண்டு இலட்சத்து அறுபதினாயிரத்து எண்ணூற்று எண்பத்திரண்டு ரூபாவுக்கு (ரூபா 12,60,882/-) சமமான அறுபதினாயிரத்து நாற்பத்தியிரண்டு அமெரிக்க டாலர்கள் (டாலர் 60,042) அடங்கிய நிதியத்தை இதனகத்து அடங்கியுள்ள தத்துவங்களுடனும் ஏற்பாடுகளுடனும், தத்துவங்களின்கீழும், ஏற்பாடுகளின்கீழும், தத்துவங்களுக்கமைவாகவும் ஏற்பாடுகளுக்கமைவாகவும், வைத்திருப்பதற்காகவும், நம்பிக்கைப் பொறுப்பின்மீது நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அவர்களின் பயன் பாட்டுக்கெனவும் இத்தால் ஒப்படைக்கின்றார்.

3. இச்சாதனத்தில் அடங்கியவற்றை நடாத்தும் முறையையும் விதத்தையும் அத்துடன் இதனகத்துத் தரப்பட்டவாறான எவையேனும் பரிசுகளை வழங்கும் அல்லது அளிக்கும் முறையையும் விதத்தையும் விதித்துரைக்கும் விதிகளையும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ஆக்குதல் வேண்டும்.

4. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தமது தற்றுணிபில் பொருத்தமானவை எனக் கருதுகின்றவாறான அத்தகைய பிணைப்பொறுப்புகளிலும் அத்துடன் தாம் பொருத்தமெனக் கருதுகின்றவாறாகக் காணிகளைக் கொள்ளுதற்கும் வைத்திருப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை முதலீடு செய்யலாம்.

5. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருமானத்திலிருந்து, மிகச் சிறந்த பயன் தரும்வகையில் இவ்வறக்கொடையை முகாமை செய்தல் வேண்டும்.

6. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், இந் நம்பிக்கைப் பொறுப்பைக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்தைப் பிணைப் பொறுப்பாக வைத்து பணம் கடன் எடுப்பதற்குத் தத்துவமுடையவர்களாதல் வேண்டும்.

7. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தமது ஆயுட்காலம் வரை பதவிவகித்தல் வேண்டும்.

8. இச்சாதனத்தில் அடங்கியவற்றின் கீழ் தாபகரும் தனது ஆயுட்காலம்வரை நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் இறப்பதன்மீது அவரது மிக நெருங்கிய அல்லது கிட்டிய உறவினர் அவரின் இடத்துக்குப் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

9. எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளர் இறந்தால் அல்லது பதவிவிலகினால் அல்லது வங்குரோத்தவராக வந்தால் அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டால் அல்லது கடனிறுக்க வகையற்றவராக வந்தால் அல்லது நிரந்தர உடற்குறையினத்துக் குட்பட்டவராயிருந்தால், அப்பொழுது தாபகர் உயிருடனிருக்கும் காலமளவுக்குத் தாபகரால், அல்லது அவர் இறப்பதன்மீது அவரது மிகநெருங்கிய அல்லது கிட்டிய உறவினரால் எழுத்தில் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆள் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரின் இடத்தில் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர் தொடர்ந்து ஆறுமாத காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருப்பின் அப்பொழுது அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் இலங்கைக்குத் திரும்புகின்றவரையில், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரின் இடத்தில் செயலாற்றுவதற்குப் பொருத்தமானவோர் ஆளை, தாபகர் அல்லது அவர் இறப்பதன்மீது அவரது மிக நெருங்கிய அல்லது கிட்டிய உறவினர் எழுத்தில் நியமிக்கலாம்.

10. நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்தின் முகாமையும் கட்டுப்பாடும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குரித்தாதல் வேண்டும்.

11. நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்கின்றவிடத்து, நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர்களுள் பெரும்பான்மையோரின் முடிபு பிணிப்பதாதலும் பயனுறுவதாதலும் வேண்டும் என்பதுடன், அது நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

12. நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களிலான பற்றுக்குறை காரணமாக அல்லது நம்பிக்கைப் பொறுப்பினை நிறைவேற்றுவது இயலாததாக வந்ததன் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பு முறிவடைகின்றவிடத்து, இலங்கை ஜாதிக சர்வோதய சிரமதான சங்கத்தின் நன்மைக்கென எஞ்சிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைப் பிரயோகிப்பதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மோசடித் தவறுக்குக் குற்றவாளிகளாக இருந்தாலொழிய, நம்பிக்கைப் பொறுப்பானது, எச்சந்தர்ப்பத்திலும், அந்நம்பிக்கைப் பொறுப்புச் சொத்துக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்குப் பொறுப்புடையதாதலாகாது.

14. நம்பிக்கைப் பொறுப்பு ஆதனம் எச்சந்தர்ப்பத்திலும், தாபகரையோ, அவரது வழியுரிமையாளர்களையோ சாட்டுதல்காரர்களையோ வேறெவரேனுமானையோ மீளச் சென்றடைதல் ஆகாது.

15. பந்தி 12 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எப்பாகமும், ஒன்றில் அதன் மூலப்பொருளாயினுஞ்சரி, அல்லது அதிலிருந்து பெறப்படும் வருவாயாயினுஞ்சரி, இத்தால் உருவாக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்படல் ஆகாது.

இதற்கத்தாட்சியாக, இதற்கான திறத்தவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துமூன்றும் ஆண்டு மார்ச்சு மாதம் நான்காம் நாளாகிய இன்று அநுராதபுரத்தில் இதற்கும், இத்தாற்பரியம்படவுள்ள இன்னும் நான்கு பிரதிகட்கும் தமது ஒப்பங்களை வைத்துள்ளனர்.

எமது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது. அத்துடன் இதற்கான உறுதி முடிபுக்காரர்கள் எமக்கு மிகவும் பரிச்சயமானவர்களெனவும் அவர்களது சரியான பெயர்கள், தான்புரி தொழில்கள், வதிவிடங்கள் என்பவற்றை நாம் அறிவோமெனவும் வெளிப்படுத்துகின்றோம்.

1. ஒப்பம் :—கே. தசநாயக்க
2. ஒப்பம் :—கே. பி. எல். பெரோரா.

1. ஒப்பம், ஏ. ரி. ஆரியரத்ன,
2. ஒப்பம், எம். டபிள்யூ. கருணனந்த.
3. ஒப்பம், பீ. ஏ. டி. குணசிங்க.
4. ஒப்பம், எஸ். வி. இராஜசூரிய.
5. ஒப்பம், டபிள்யு. கந்தகே.
6. ஒப்பம், என். இரட்ணபால.
7. ஒப்பம், பி. அமரசிங்க.
8. ஒப்பம், எஸ். த மெல்.
9. ஒப்பம், எம். ஈ. டபிள்யூ. பீரிஸ்.

ஒப்பம் : டீ. வி. பி. மகாதியுல்வெவ,
பிரசித்த நொத்தாரிசு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், அநுராதபுரத்தைச் சேர்ந்த, பிரசித்த நொத்தாரிசுவாகிய திவாகர புஞ்சிபண்டா மகாதியுல்வெவ ஆகிய நான், மேற்போந்த சாதனம், இதன்கண் பெயர்குறிக்கப்பட்டுள்ளவர்களும் நான் அறிந்தவர்களுமான, 1. கலாநிதி அஹங்கமகே ரியூடர் ஆரியரத்ன, 2. திரு. மல்லியவடு கருணனந்த, 3. திரு. போகம ஆராச்சிகே தர்மா குணசிங்க, 4. திருமதி சீதா வேர்ஜினியா இராஜசூரிய, 5. திரு. வில்லியம் கந்தகே, 6. பேராசிரியர் நந்தசேன இரத்தினபால, 7. கலாநிதி பலானகே அமரசிங்க, 8. திரு. சுநில் த மெல், 9. திரு. மல்வத்தகே எட்மண்ட் வால்டர் பீரிஸ் என்பவர்களால், (இவர்களுள் வில்லியம் கந்தகேயும் பேராசிரியர் நந்தசேன இரட்ணபாலவும் சிங்களத்திலும் ஏனைய யாவரும் ஆங்கிலத்தில் தெளிவின்றியும் ஒப்பமிட்டுள்ளனர்) நானறிந்தவர்களும் இதற்கான கீழே ஒப்பமிட்டுள்ள சாட்சிகளுமாகிய மொறட்டுவை ராவதாவத்த வீதி, 98 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கருணாரத்ன தசநாயக்க, கொழும்பு 6, கொலிங்வூட் இடம், 51 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த லலேஹ பத்திரனகே லெஸ்லி பெரோரா என்பவர்களின் (இவர்கள் ஆங்கிலத்தில் தெளிவின்றி ஒப்பமிட்டுள்ளனர்) முன்னிலையில் இச்சாதனம் முறையாக வாசிக்கப்பட்டு சொல்லப்பட்ட உறுதிமுடிப்பவர்களாலும் சொல்லப்பட்ட சாட்சிகளாலும் சொல்லப்பட்ட நொத்தாரிசுவாகிய என்னாலும் எனது முன்னிலையிலும் ஒருவரொருவர் முன்னிலையிலும், அனைவரும் ஒரே நேரத்தில் சமுகமாயிருக்க அநுராதபுரத்தில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துமூன்றும் ஆண்டு மார்ச்சு மாதம் நான்காம் நாளாகிய இன்று ஒப்பமிடப்பட்டது என இத்தால் அத்தாட்சிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

மேலும், இச்சாதனத்தின் இணைப்பிரதி பத்து ரூபா பெறுமதி கொண்ட ஒரு முத்திரையையும் மூலப்பிரதி ஒரு ரூபா முத்திரையொன்றையும் கொண்டுள்ளது எனவும் நான் அத்தாட்சிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

இதனை நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
ஒப்பம் : டீ. பி. பி. மஹாதியுல்வெவ,
பிரசித்த நொத்தாரிசு.

உறுதிப்படுத்தும் தேதி,
1983, மார்ச் 4.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.